# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 17 | 4 Pages | 18.08.2023 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 17 | 4 பக்கங்கள் | 18.08.2023 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## திடீர் கோளாறு: ரன்வேக்கு பதிலாக நெடுஞ்சாலையில் விழுந்து நொறுங்கிய விமானம்... 10 பேர் பலி



மலேசியா, ஆக 18

விமான நிலையத்தின் கட்டுப்பாட்டு கோபுரத்துடன் தொடர்பை இழந்தது காரில் பயணித்த ஒருவர் மற்றும் பைக்கில் பயணித்தவர் உயிரிழந்தனர்

ஆசிய நாடான மலேசியாவின் மேற்கு கரையோரம் உள்ள மாநிலம் செலங்கோர். இன்றுமலேசியாவின்லங்காவிபகுதியிலிருந்து 6 பயணிகள் மற்றும் 2 விமான ஊழியர்களுடன் செலங்கோரிலுள்ள சுபங்க் விமான நிலையம் நோக்கி ஜெட் வேலட் எனும் தனியார் ஜெட் விமான சேவை நிறுவனத்திற்கு சொந்தமான சிறிய ரக விமானம் பறந்து கொண்டிருந்தது. இவ்விமானத்திற்கு மதியம் 02:48 மணியளவில் தரையிறங்க அனுமதி வழங்கப்பட்டது. மதியம் சுமார் 02:10 மணியளவில் தரையிறங்கும் சற்று நேரத்திற்கு முன்பாக விமான நிலையத்தின் தொலைத்தொடர்பு கட்டுப்பாட்டு கோபுரத்துடன் தொடர்பை இழந்தது. கட்டுப்பாட்டை இழந்த விமானம் ஷா ஆலம் நெடுஞ்சாலையில் விழுந்து நொறுங்கியது. இவ்விபத்தில், விமானம் நெடுஞ்சாலையில் அந்த பக்கமாக சென்று கொண்டிருந்த ஒரு கார் மற்றும் ஒரு மோட்டார் பைக் மீது விழுந்து நொறுங்கியது. இதில் அதில் பயணித்த இருவர் உயிரிழந்தனர். இதோடு விமானத்தில் பயணம் செய்த எட்டு பேரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். சமூக வலைதளங்களில் இவ்விபத்து குறித்து வெளியிடப்பட்டிருக்கும் புகைப்படங்களிலில் ஷா ஆலம் நெடுஞ்சாலையின் ஒரு பகுதியில் தீயுடன் புகை வந்து கொண்டிருப்பதும், விமானத்தின் பாகங்களும் தெரிகிறது. சாலையில் விழுந்த விமானம் உடனடியாக வெடித்ததாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். விமானத்தில் உயிரிழந்த பயணிகளில் ஜொஹாரி ஹாருண் எனும் அந்நாட்டின் அரசியல்வாதியும் ஒருவர். விபத்து குறித்து வருத்தம் தெரிவித்திருக்கும் பல முக்கிய பிரமுகர்களும், இறந்தவர்களின் குடும்பங்களுக்கு தங்கள் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளனர்.

## இதுவும் குஜராத் மாடல்தான்.. பதற வைக்கும் ஊட்டச்சத்து குறைபாடு ஆய்வறிக்கை



குஜராத், ஆக. 18

குஜராத் மாநிலத்தில் 100 பேரில் மூன்று பேர் வீதம் ஊட்டச்சத்து குறைபாடு மூலம் பாதிக்கப்பட்டுள்ளனர். ஊட்டச்சத்து குறைபாடு பாதிப்புகொண்ட குழந்தைகள்அதிகம்உள்ளமாநிலங்கள்பட்டியலில் குஜராத் நான்காவது இடம்.

நிதி ஆயோக் வெளியிட்டு இருக்கும் சமீபத்திய அறிக்கையின் படி, குஜராத் மாநிலத்தை சேர்ந்த சுமார் 38.09 சதவீதம் பேர் ஊட்டச்சத்து குறைபாடு மூலம் பாதிக்கப்பட்டுள்ளனர் என்ற அதிர்ச்சி தகவல் தெரியவந்துள்ளது. குஜராத் மாநிலத்தின் கிராமபுறங்களை சேர்ந்த பாதிக்கும் மேற்பட்டோர் (44.45 சதவீதம்), நகர்ப்புறங்களில் சுமார் 28.97 சதவீதம் பேருக்கு ஊட்டச்சத்து குறைபாடு இருக்கிறது. பின்தங்கிய மாநிலங்களாக இருக்கும் சட்டீஸ்கர், மத்திய பிரதேசம், ராஜஸ்தான் மற்றும் உத்திர பிரதேசம் உள்ளிட்டவை ஊட்டச்சத்து குறைபாடு அளவில் குஜராத் மாநிலத்தை விட சிறப்பாக செயல்பட்டுள்ளன. தேசிய குடும்பநல கணக்கெடுப்பின் படி தேசிய அளவில் ஊட்டச்சத்து குறைபாடு மூலம் பாதிக்கப்பட்ட குழந்தைகள் அதிகம் உள்ள மாநிலங்கள் பட்டியலில் குஜராத் நான்காவது இடம்பிடித்துள்ளது. இந்த மாநில குழந்தைகளில் சுமார் 39 சதவீதம் பேர் தங்களது வயதிற்கு ஏற்ற எடையை விட குறைந்த எடை கொண்டிருக்கின்றனர்.

"ஊட்டச்சத்து மிகுந்த கவனமுடன் கையாளப்பட வேண்டிய ஒன்று. 2016ம் ஆண்டு மேற்கு வங்காள குடும்பங்களை சேர்ந்த சுமார் 33.6 சதவீதம் பேர், குஜராத் மாநிலத்தில் 41.37 சதவீதம் பேரும் ஊட்டச்சத்து குறைபாடு கொண்டுள்ளனர். 2021ம் ஆண்டு மேற்கு வங்க மாநிலத்தில் 27.3 சதவீதம் பேரும், குஜராத் மாநிலத்தில் 38.9 சதவீதம் பேருக்கு ஊட்டச்சத்து குறைபாடு ஏற்பட்டுள்ளது," என பொருளாதார பேராசிரியர் அட்மன் ஷா தெரிவித்தார். இந்த தகவல்களின் படி குஜராத் மாநிலத்தில் ஒவ்வொரு 100 பேரில் மூன்று பேர் வீதம் ஊட்டச்சத்து குறைபாடு மூலம் பாதிக்கப்பட்டுள்ளனர். இதே காலக்கட்டத்தில் மேற்கு வங்க மாநிலத்தில் 100 பேரில் ஆறு பேர் வீதம் ஊட்டச்சத்து குறைபாடு மூலம் பாதிக்கப்பட்டுள்ளனர். நிதி ஆயோக் தகவல்களின் படி, குஜராத் மாநிலத்தின் 23.30 சதவீதம் பேருக்கு ஊட்டச்சத்து குறைபாடு ஏற்பட்டு இருக்கிறது. கேரளா, பஞ்சாப மற்றும் தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் குஜராத்தை விட சிறப்பாக செயல்பட்டுள்ளன. நாடு முழுக்க குஜராத் மாடல் மற்றும் வளர்ச்சி என பல்வேறு தகவல்கள், கருத்துக்கள் வெளியாகி வந்துள்ளன. இந்த நிலையில், அம்மாநிலத்தில் ஊட்டச்சத்து குறைபாடு விவரங்கள் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளன.

# தமிழ்நாட்டை தி.மு.க. தான் நிரந்தரமாக ஆளும்: முதல்வர் மு.க.ஸ்டாலின் பேச்சு



ராமநாதபுரம், ஆக. 18

திமுக ஆட்சி காலத்தில்தான் தமிழகத்திற்கு ஏராளமான திட்டங்கள் கொண்டுவரப்பட்டன. திமுகவின் வளர்ச்சிக்கு பாடுபடும் தொண்டர்களை பாராட்டுகிறேன்.

ராமநாதபுரத்தில் இன்று மாலை தென்மண்டல அளவிலான திமுக வாக்குச்சாவடி முகவர்கள் பயிற்சி பட்டறை கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் பங்கேற்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது: வீரம் மிகுந்த ராமநாதபுரம் மண்ணில் கூடி இருக்கிறோம். ராமநாதபுரம் மாவட்ட வளர்ச்சிக்கு திமுக எண்ணற்ற திட்டங்களை கொண்டு வந்துள்ளது. ராமநாதபுரத்திற்கு காவிரி கூட்டு குடிநீர் திட்டம் கொண்டுவரப்பட்டது. ராமநாதபுரத்தில் கிராம சாலைகள், நெடுஞ்சாலைகளாக தரம் உயர்த்தப்பட்டது. வறட்சி மாவட்டமாக இருந்த ராமநாதபுரம் வளர்ச்சி மாவட்டமாக மாறியுள்ளது. தண்ணியில்லா காடாக இருந்த ராமநாதபுரத்திற்கு தண்ணீர் கொண்டு வந்தோம். நீண்ட காலமாக ஓடாமல் இருந்த ராமநாத சுவாமி கோயில் தேரை ஓட வைத்தோம். பின் தங்கிய ராமநாதபுர மாவட்ட திமுக ஆட்சியில் தான் வளர்ச்சி கண்டது. திமுகவின் வளர்ச்சிக்கு பாடுபடும் தொண்டர்களை பாராட்டுகிறேன். தமிழகத்தை மீண்டும் ஆள வேண்டுமென கருணாநிதி கண்ட கனவை நிறைவேற்றிவிட்டோம். கட்சியில் புதிய உறுப்பினர்களை சேர்க்கும் பணி வெற்றிகரமாக முடிந்தது. 68,036 பேர் வாக்குச்சாவடி பொறுப்பாளர்களாக தேர்வு செய்யப்பட்டுள்ளனர். வாக்குச்சாவடி முகவர்கள் பயிற்சி பட்டறை கூட்டத்திற்கு உழைத்தவர்களுக்கு பாராட்டுக்கள். பல கட்ட ஆய்வுகளுக்கு பிறகே வாக்குச்சாவடி பொறுப்பாளர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டது. 5 முறை ஆட்சியை கைப்பற்றிய திமுக தற்போது 6 முறையாக ஆட்சி செய்து வருகிறது. திமுக ஆட்சி காலத்தில்தான் தமிழகத்திற்கு ஏராளமான திட்டங்கள் கொண்டுவரப்பட்டன. வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள்தான் பாராளுமன்ற வெற்றிக்கும் பொறுப்பாளர்கள். 40ம் நமதே என்ற லட்சியத்துடன் தொண்டர்கள் கம்பீரத்துடன் பணியாற்ற வேண்டும். வாக்குச்சாவடிக்கு வாக்காளர்களை கொண்டுவர வேண்டியது உங்கள் பணி. வாக்குச்சாவடியில் உள்ள குடும்பங்களில் ஒருவராக நீங்கள் மாற வேண்டும். ஒரு நாளைக்கு ஒரு மணி நேரம் நீங்கம் ஒதுக்கினால் போதும். அரசின் திட்டங்களைமக்களிடம்கொண்டு சேர்க்க வேண்டும். மக்களின் தேவையை கண்டறிந்து நிறைவேற்றினால் வெற்றி நிச்சயம். தமிழ்நாட்டில் திமுகதான் நிரந்தரமாக ஆளும். இவ்வாறு அவர் பேசினார்.

# உதயநிதி ஸ்டாலின் நடித்து வெளியான மாமன்னன் திரைப்படத்தின் 50வது நாள் கொண்டாட்டம்



திருப்பூர், ஆக. 18

உதயநிதி ஸ்டாலின் நடித்து வெளியான மாமன்னன் திரைப்படம் வெற்றிகரமாக 50 நாள் ஓடியதை கொண்டாடும் விதமாக.

திருப்பூர் மாவட்ட ஒருங்கிணைந்த உதயாநிதி ஸ்டாலின் ரசிகர் மன்றம் சார்பாக திருப்பூர் மாநகராட்சியில் உள்ள அனைத்து அரசு பள்ளிக்கும் கழிவறைகளை தூய்மைப்படுத்தும் உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி குமார் நகர் அரசு மேல்நிலைப் பள்ளியில் உதயநிதி ஸ்டாலின் ரசிகர் மன்ற ஒருங்கிணைந்த மாவட்ட தலைவர் NSK சிவக்குமார் தலைமையில் , நடைபெற்றது உபகரணங்களை திருப்பூர் மாநகராட்சி வணக்கத்திற்குரிய மேயர் தினேஷ் குமார் முன்னிலையில் பள்ளிக்கு வழங்கப்பட்டது இதில் மாநகரத் தலைவர் சஷ்டி விஜயகுமார்மா வட்ட துணைச் செயலாளர் செந்தூர் ஆனந் மாநகர செயலாளர் தம்பி குருபரணி உடன் மன்ற பொறுப்பாளர்கள் சங்கர், ஆட்டோ முருகன், சூர்யா, மணிமாறன், சதிஷ்குமார், மனோஜ், சசி, மணிபாரதி, கோகுல், ஹரிஸ்குமார், ஜெயராம், அஸ்வின், உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் பெருந்திரளானோர் பங்கேற்றனர்

# சாமளாபுரம் வாழைத்தோட்டத்து அய்யன்கோவிலில் சமபந்தி விருந்து

மங்கலம், ஆக. 18

வாழைத்தோட்டத்து அய்யன்கோவிலில் சிறப்புவழிபாடு மற்றும் சமபந்தி விருந்து நடைபெற்றது. சுதந்திர தினத்தை முன்னிட்டு சமபந்தி விருந்து ஏற்பாடு செய்யப்பட்டது.

சுதந்திர தினத்தை முன்னிட்டு திருப்பூர் மாவட்டம், சாமளாபுரம் அருகே உள்ள வி.அய்யம்பாளையம் பகுதியில் அமைந்துள்ள வாழைத்தோட்டத்து அய்யன்கோவிலில் சிறப்புவழிபாடு மற்றும் சமபந்தி விருந்து நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் வாழைத்தோட்டத்து அய்யன்கோவில் உதவி ஆணையர் செந்தில்குமார், சாமளாபுரம் பேரூராட்சி மன்றத்தலைவர் விழாயகா பழனிச்சாமி, துணைத்தலைவர் குட்டிவரதராஜன், சாமளாபுரம் வருவாய்த்துறை ஆய்வாளர் பிரேமா, பள்ளபாளையம் கிராம நிர்வாக அலுவலர் மகேஸ்வரன், திமுக., சாமளாபுரம் பேரூர் செயலாளர் வேலுச்சாமி , துணைச்செயலாளர் தியாகராஜன், சாமளாபுரம் பேரூராட்சி மன்ற வார்டு கவுன்சிலர்கள் பெரியசாமி, வினோஜ்குமார், துளசிமணி ஆறுமுகம், கோவில் பணியாளர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



# திருப்பூர் ஏற்றுமதியாளர்களுடன் பீகார் தொழிலாளர் துறை அதிகாரிகள் ஆலோசனை

திருப்பூர், ஆக. 18

தொழிலாளர்களை வெளிமாநிலங்களுக்கு அனுப்பி வைக்கவும் திட்டமிட்டுள்ளோம் இளைஞர்களைத் தேர்வு செய்து சிறப்பு பயிற்சி அளித்து, அங்கீகார சான்றிதழ்களும் வழங்கப்படுகிறது.

பீகார் மாநில அரசின் தொழிலாளர் துறை சார்பில், திறன் மேம்பாட்டு மிஷன் தொடங்கப்பட்டுள்ளது. இதன் மூலமாக அந்த மாநிலத்தில் உள்ள இளைஞர்களைத் தேர்வு செய்து திறன் மேம்பாட்டு பயிற்சி அளித்து வேலைவாய்ப்பு அளிக்க திட்டமிட்டுள்ளனர். இந்நிலையில், பீகார் தொழிலாளர் துறை அதிகாரிகள், திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்க அலுவலகத்தில் அதன் நிர்வாகிகளை சந்தித்து ஆலோசனையில் ஈடுபட்டனர். இதில், தமிழ்நாடு உயர்திறன் மேம்பாட்டு மைய நிர்வாக இயக்குநர் கிரிதரன், பீகார் திறன்மேம்பாட்டு மிஷன் இயக்குநர் சஞ்சய்குமார் தொழிலாளர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் திறன் மேம்பாட்டுப் பயிற்சி திட்டம் திறன் குறித்து பேசினர். திறன்மேம்பாட்டு மிஷன் கூடுதல் முதன்மை செயல் அலுவலர் ராஜீவ் ரஞ்சன் பேசுகையில், பீகாரில் திறன் பயிற்சி பெற்ற தொழிலாளர்களை உருவாக்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இதில், இளைஞர்களைத் தேர்வு செய்து சிறப்பு பயிற்சி அளித்து, அங்கீகார சான்றிதழ்களும் வழங்கப்படுகிறது. இந்த தொழிலாளர்களை வெளிமாநிலங்களுக்கு அனுப்பி வைக்கவும் திட்டமிட்டுள்ளோம். இதன் மூலமாக திருப்பூரின் தொழிலாளர் தேவை பூர்த்தியாகும் என்றார். இது குறித்து திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கத் தலைவர் கே.எம். சுப்பிரமணியன் பேசுகையில், பின்னலாடைத் தொழிலுக்கு திறன் பயிற்சி பெற்ற தொழிலாளர்களின் தேவை அதிகமாக உள்ளது. பீகார் அதிகாரிகளின் அழைப்பை ஏற்று அங்குள்ள திறன் பயிற்சி மையங்களை நேரில் பார்வையிட்டு விரிவாக ஆலோசிக்கவும் திட்டமிட்டுள்ளோம் என்றார். இந்தக் கூட்டத்தில், திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்க பொதுச் செயலாளர் திருக்குமரன், பொருளாளர் கோபாலகிருஷ்ணன், இணைச்செயலாளர் குமார் துரைசாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## திருமாவளவன் பிறந்தநாள்: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து

சென்னை, ஆக. 18

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவனுக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்து உள்ளார். இம்மண்ணில் ஆழ விதைக்கப்பட்டுள்ள தந்தை பெரியார், புரட்சியாளர் அம்பேத்கர் கருத்துகளைத் தனது பேச்சாலும் செயல்களாலும் வளப்படுத்திடும் அன்புச் சகோதரர். முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவனுக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்து உள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது: இம்மண்ணில் ஆழ விதைக்கப்பட்டுள்ள தந்தை பெரியார், புரட்சியாளர் அம்பேத்கர் கருத்துகளைத் தனது பேச்சாலும் செயல்களாலும் வளப்படுத்திடும் அன்புச் சகோதரர் தொல். திருமாவளவனுக்கு பிறந்தநாள் வாழ்த்துகள். இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

## ஆடுகளை வேட்டையாட கரட்டில் பதுங்கிய சிறுத்தை: டிரோன் கேமரா மூலம் கண்காணிப்பு




ஓமலூர், ஆக. 18

டிரோன் கேமரா சிறுத்தை அருகில் கொண்டு செல்லும் போது, அது கீழே இறங்கி செல்வது பதிவாகி இருந்தது. சிறுத்தை இருந்த பகுதியில் மரங்கள், பாறைகள் ஆகிய இடங்களில் கூடுதலாக கண்காணிப்பு கேமராக்கள் கட்டி வைத்துள்ளனர்.

சேலம் மாவட்டம் ஓமலூர் அருகே உள்ள பூசாரிப்பட்டி ஊராட்சியில் வைரன்காடு கிராமம் உள்ளது. இந்த கிராமத்தை ஒட்டியுள்ள பெரிய கரட்டில் கடந்த 2 நாட்களாக சிறுத்தை ஒன்று நடமாடி வந்துள்ளது. இதை பார்த்த கிராம மக்கள் அச்சத்தில் வனத்துறையிடம் புகார் அளித்துள்ளனர். இதையடுத்து வனத்துறை சார்பில் பல்வேறு இடங்களில் கண்காணிப்பு கேமராக்கள் வைத்து கண்காணித்தனர். சிறுத்தை ஒரே இடத்தில்இல்லாமல்ஒவ்வொரு கரடாக மாறிமாறி சென்று வைரன்காடு பகுதியில் உள்ள கரட்டில் 2 நாட்களாக பதுங்கி இருப்பது தெரியவந்தது. இந்த நிலையில் அந்த பகுதியில் மேய்ச்சலுக்கு சென்ற 4 ஆடுகளை சிறுத்தை வேட்டையாட முயன்றது. அப்போது சிறுத்தையிடம் இருந்து தப்பிய 4 ஆடுகள் அங்குள்ள செங்குத்தான பாறைக்கு சென்று தஞ்சமடைந்தன.

ஆனால் 4 ஆடுகளும் கீழே இறங்க முடியாமல் எட்டி எட்டி பார்த்தபடி பாறையிலேயே நின்றது. இரவு நேரமானதால் வனத்துறை அதிகாரிகள், ஆடுகள் இருந்த பகுதிக்கு செல்லாமல் டிரோன் கேமரா மூலம் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர். அப்போது ஆடுகள் இருந்த பாறையின் மீது ஏறிய சிறுத்தை பாறை மீது பதுங்கி இருப்பது தெரிய வந்தது. இதனை டிரோன் கேமரா மூலம் வனத்துறை அதிகாரிகள் படம் பிடித்தனர்.

ஆடுகள் செங்குத்தான பாறை பகுதியில் இருந்ததால், சிறுத்தையால் ஆடுகளை வேட்டையாட முடியாமல், பாறையின்மேலே படுத்துக்கொண்டு ஆடுகளை கீழே விரட்டும் வகையில் அச்சுறுத்தி வந்துள்ளது.

இந்தநிலையில்டிரோன் கேமரா சிறுத்தை அருகில் கொண்டு செல்லும் போது, அது கீழே இறங்கி செல்வது பதிவாகி இருந்தது. இந்த நிலையில் காலை வனப்பகுதிக்கு சென்ற வனத்துறை அதிகாரிகள், ஆடுகளைபாதுகாப்பாக கீழே விரட்டிவிட்டு, சிறுத்தை படுத்திருந்த பகுதியில் ஆய்வு செய்தனர். அப்போது அங்கு சிறுத்தையின் முடி இருப்பது தெரிய வந்தது. இதையடுத்து சிறுத்தை இருந்த பகுதியில் மரங்கள், பாறைகள் ஆகிய இடங்களில் கூடுதலாக கண்காணிப்பு கேமராக்கள் கட்டி வைத்துள்ளனர். தொடர்ந்து வனத்தை சுற்றிலும் வனத்துறை அதிகாரிகள் கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். சிறுத்தை இருப்பதை உறுதி செய்துள்ள நிலையில் பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்கவும், ஆடுமாடுகளை வனப்பகுதிக்கு அனுப்ப வேண்டாம் என்றும் வனத்துறையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர். தொடர்ந்து அங்கேயே தங்கி கண்காணித்து வருகின்றனர்.

## மகளிர் உரிமைத்தொகை: விடுபட்ட பெண்கள் பதிவு செய்ய இன்று முதல் 3 நாட்கள் முகாம்




சென்னை, ஆக. 18

தமிழகத்தில் மகளிர் உரிமைத் தொகை திட்டம் அண்ணா பிறந்தநாளான செப்டம்பர் 15ந் தேதி தொடங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்தில் பெண்களை சேர்ப்பதற்கான விதிமுறைகள் அறிவிக்கப்பட்டு அதற்கான விண்ணப்பப்படிவம் வீடு வீடாக வழங்கப்பட்டது. இந்த நிலையில் விடுபட்டு போனவர்களுக்கு இன்று (18ந் தேதி) முதல் 3 நாட்கள் சிறப்பு முகாம்கள் நடக்கின்றன. ஞாயிற்றுக்கிழமை (20ந் தேதி) வரை இந்த சிறப்பு முகாம் நடைபெறும். ரேஷன் கடைகளுக்கு சென்று விண்ணப்பப்படிவத்தை பெற்று முகாம்களுக்கு சென்று உரிய ஆவணங்களுடன் சமர்பிக்க வேண்டும். விண்ணப்ப படிவங்களை இறுதி செய்து அதன் பின்னர் வீடு வீடாக ஆய்வு செய்ய வேண்டிய பணி நடைபெற உள்ளது. விண்ணப்பத்தில் கொடுத்த தகவல் உண்மை தானா? உரிமைத்தொகை பெற தகுதி உடையவரா? வேறு ஏதாவது உதவித்தொகை பெறுகின்றனரா? என்பதை அதிகாரிகள் கள ஆய்வு செய்கிறார்கள். இந்த பணி அடுத்த வாரத்தில் தொடங்குகிறது. சென்னையில் இதுவரையில் 5 லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் விண்ணப்பித்து உள்ளனர். விடுபட்டவர்களுக்கு நாளை சிறப்பு முகாம்கள் அந்தந்த பகுதிகளில் நடக்கிறது. திங்கட்கிழமையுடன் இந்த பணி நிறைவடைகிறது. அதனை தொடர்ந்து களப்பணியாளர்கள் வீடு வீடாக ஆய்வு பணியில் ஈடுபட்டு பயனாளிகளை தேர்வு செய்கின்றார்கள்.

## மாமல்லபுரத்தில் சர்வதேச "சர்பிங் லீக்" போட்டி இறுதிப்போட்டிக்கு தகுதிப்பெற்றது ஜப்பான்



மாமல்லபுரம், ஆக. 18

தமிழ்நாடு அலைசறுக்கு சங்கம் மற்றும் இந்திய அலைசறுக்கு கூட்டமைப்பு இணைந்து, சர்வதேச லீக் போட்டியை மாமல்லபுரத்தில் நடத்துகிறது. கடந்த 14ம் தேதி போட்டியின் இயக்குனர் டைராபர்ட் சோராட்டி போட்டியை துவக்கி வைத்தார்.

இந்தியா, இலங்கை, சிங்கப்பூர், இந்தோனேசியா, மடகாஸ்கர், பிலிப்பைன்ஸ், ஜப்பான், இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, மாலத்தீவு உள்ளிட்ட 10 நாடுகளில் இருந்து ஆண்கள்பெண்கள் என 70 வீரர்கள் பங்கேற்றுள்ளனர். இதில் 4வது நாளான இன்று முதல் முறையாக பெண்கள் அணியினர் களம் இறங்கி சாகசம் செய்தனர். அனைத்து வயது பிரிவிலும் இந்தியா இறுதிச் சுற்று தகுதியை இழந்தது. அனைத்திலும் ஜப்பான் வீரர்கள் மட்டுமே இன்று வரை முன்னிலையில் இருந்தனர்.

இறுதிச்சுற்றுக்கான தகுதியையும் பெற்றுள்ளனர். இப்போட்டிகள் நாளை மறுநாள் வரை நடைபெறுகிறது. கடற்கரை கோயில் வடபகுதியில் சுற்றுலா பயணிகள் அமர்ந்து போட்டியை பார்க்க பிரத்யேக மேடை அமைக்கப்பட்டுள்ளது. கட்டணம் ஏதும் கிடையாது.

## வீராம்பட்டினம் செங்கழுநீரம்மன் கோவில் தேரோட்டம் புதுச்சேரியில் பள்ளிகளுக்கு இன்று விடுமுறை



புதுவை, ஆக. 18

புதுச்சேரியை அடுத்த வீராம்பட்டினத்தில் பிரசித்தி பெற்ற செங்கழுநீர் அம்மன் கோவில் உள்ளது. இந்தக் கோவில் தேரோட்டம் இன்று காலை 8 மணியளவில் நடக்கிறது. இந்த விழாவில் ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன், முதலமைச்சர் ரங்கசாமி, சபாநாயகர் செல்வம், தொகுதி எம்.எல்.ஏ. பாஸ்கர் மற்றும் அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள் கலந்து கொள்கின்றனர். இதையொட்டி பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்த ஆலோசனை கூட்டம் தெற்கு பகுதி போலீஸ் சூப்பிரண்டு அலுவலகத்தில் இன்று நடந்தது. கூட்டத்தில் போலீஸ் சூப்பிரண்டு வீரவல்லவன், பாஸ்கர் எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்து கொண்டு பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து பேசினர்.

விழாவில் உள்ளூர் மட்டுமின்றி தமிழக பகுதியில் இருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தருவதால் 500க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பில் ஈடுபட உள்ளனர். இந்நிலையில், புதுச்சேரியில் பள்ளிகளுக்கு இன்று விடுமுறை அறிவித்து பள்ளிக் கல்வித்துறை உத்தரவிட்டுள்ளது. வீராம்பட்டினம் செங்கழுநீரம்மன் கோவில் தேரோட்டத்தை முன்னிட்டு விடுமுறை அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

## சிவன்மலையில் கிரானைட் குவாரி அமைக்க பொதுமக்கள் எதிர்ப்பு



காங்கயம், ஆக. 18

கிரிவலப்பாதை அருகே 17.9 ஹெக்டேர் அரசு புறம்போக்கு நிலத்தில் கிரானைட் குவாரி உள்ளது. அரசு விதிகளின்படி உள்ள 40 வகையான ஆவணங்கள் இணைக்கப்படவில்லை.

திருப்பூர் மாவட்டம் காங்கயம் அருகே சிவன்மலையில் உள்ள சுப்பிரமணிய சுவாமி மலைக்கோயில் அடிவாரப் பகுதியில் உள்ள கிரிவலப்பாதை அருகே 17.9 ஹெக்டேர் (சுமார் 45 ஏக்கர்) அரசு புறம்போக்கு நிலத்தில் கிரானைட் குவாரி உள்ளது.தமிழ்நாடுகனிமநிறுவனத்துக்கு சொந்தமான இந்த குவாரியில் கலர் கிரானைட் துண்டுகளை வெட்டி எடுப்பதற்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவதற்கான பொதுமக்கள்கருத்து கேட்புக் கூட்டம் நடைபெற்றது. மாவட்ட நிர்வாகம் திருப்பூர் வடக்கு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் ஆகியன சார்பில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு, மாவட்ட வருவாய் அலுவலர் ஜெய்பீம் தலைமை வகித்தார். இதில் தமிழ்நாடு கனிமவள நிறுவன துணை மேலாளர் கணேசன், திருப்பூர் வடக்கு மாசுக்கட்டுப்பாட்டு வாரிய அலுவலர் சரவணகுமார் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பொதுமக்கள் சார்பில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர் முகிலன், தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்க நிறுவனர்ஈசன்முருகசாமி, காங்கயம் ஊராட்சி ஒன்றியக் குழு தலைவர் டி. மகேஷ்குமார் மற்றும் சிவன்மலை பகுதி மக்கள் 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். கனிமவளநிறுவனதுணை மேலாளர் கணேசன், மேற்கண்ட குவாரியில் கலர் கிரானைட் கற்கள் வெட்டி எடுக்கும் திட்டம் குறித்தும்,

அதனுடைய செயல்பாடு குறித்தும் குறும்படம் மூலம் விளக்கினார். அப்போது கூட்டத்தில் கலந்து கொண்ட தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்க நிறுவனர் ஈசன் முருகசாமி, முகிலன் உள்ளிட்டோர் எழுந்து இதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.அரசு விதிகளின்படி உள்ள 40 வகையான ஆவணங்கள் இதில் இணைக்கப்படவில்லை என்றும், இங்குள்ள இயற்கை வளத்தை எடுத்துச் செல்வதை அனுமதிக்க மாட்டோம் என்றும் கூறினர். தொடர்ந்து கிரானைட் கல் குவாரியில் கல் எடுக்கும் திட்டத்தை ரத்து செய்ய வலியுறுத்தி, முழக்கமிட்டனர். கூட்டத்துக்கு வந்திருந்த பொதுமக்களும் கல்குவாரி திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தனர். காங்கயம் ஊராட்சி ஒன்றியக் குழு தலைவர் டி.மகேஷ்குமார் பேசியபோது, காங்கயம் ஒன்றியக் குழு, சிவன் மலை ஊராட்சி கூட்டங்களைக் கூட்டிஇதற்கு எதிராக தீர்மான நிறைவேற்றப்படும் எனவும்,

இத்திட்டத்தை உடனடியாக ரத்து செய்ய வேண்டும் எனவும் வலியுறுத்தினார். இதையடுத்து, மாவட்ட வருவாய் அலுவலர் ஜெய்பீம், பாதியில் கூட்டத்தை விட்டு எழுந்து சென்றார். இவரைத் தொடர்ந்து மற்ற அலுவலர்களும் சென்று விட, பொதுமக்களும் எந்தவித முடிவும் தெரியாமல் கலைந்து சென்றனர்.

## சிறுமுகையில் ரேஷன் கடையை சூறையாடிய காட்டு யானை



கோவை, ஆக. 18

ஜன்னலை உடைத்து கடைக்குள் இருந்த அரிசியை ருசித்து தின்றது ஊருக்குள் யானை நடமாட்டம் பொதுமக்களிடம் அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது

கோவை மேட்டுப்பாளையம் வனப்பகுதிகளில் காட்டு யானைகள் உள்பட பல்வேறு வனவிலங்குகள் வாழ்ந்து வருகின்றன. வனவிலங்குகள் தண்ணீர், உணவு தேடி அடிக்கடி மலையடிவாரத்தையொட்டி குடியிருப்பு பகுதிகளுக்குள் நுழைந்து வருவதை வாடிக்கையாக வைத்துள்ளது. அவ்வாறு வரும் யானைகள், குடியிருப்பு பகுதிகளில் உள்ள வீடு மற்றும் விவசாய நிலங்களில் உள்ள பயிர்களை சேதப்படுத்துவதோடு, பொருட்களையும் சூறையாடி செல்கிறது. தொடர்ந்து யானைகள் குடியிருப்பு பகுதிகளுக்குள் சுற்றி திரிந்து வருவதால் பொதுமக்கள் அச்சத்தில் உள்ளனர். சிறுமுகை அடுத்த சம்பூரவள்ளிபுதூர் பகுதியில் ரேஷன் கடை செயல்பட்டு வருகிறது. இன்று காலை வனத்தை விட்டு வெளியேறிய ஒற்றை காட்டு யானை, சம்பூரவள்ளி புதூருக்குள் நுழைந்தது. இதையும் படியுங்கள்: ராமேஸ்வரத்தில் மீனவர்களுடன் கலந்துரையாடிய முதல்வர் ஸ்டாலின் அந்த பகுதியில் வெகு நேரமாக சுற்றி திரிந்த ஒற்றை காட்டு யானை, ரேஷன் கடை அருகே சென்றது. பின்னர் ரேஷன் கடையின் ஜன்னலை உடைத்து, துதிக்கையை உள்ளே விட்டு அரிசியை எடுத்து ருசித்து சாப்பிட்டது. தொடர்ந்து அங்கிருந்து காட்டு யானை சென்று விட்டது. இன்று காலை அந்த வழியாக வந்த பொதுமக்கள், ரேஷன் கடையின் ஜன்னல் உடைக்கப்பட்டு இருந்ததை பார்த்து பணியாளர்களுக்கு தெரிவித்தனர். அவர்களும் வந்து பார்த்தனர்.அப்போது அதிகாலை நேரத்தில் ஊருக்குள் புகுந்த ஒற்றை காட்டு யானை, ஜன்னலை உடைத்து அரிசியை சாப்பிட்டு சென்றது தெரியவந்தது. யானை நடமாட்டம் இருப்பது பற்றிய தகவல் அந்தபகுதி மக்களிடையே மிகுந்த அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது. யானைகள் ஊருக்குள் வராமல் தடுக்க வனத்துறையினர் ரோந்து பணி மேற்கொள்ள வேண்டும் என பொது மக்கள் தெரிவித்தனர்.

## கரும்பிலிருந்து வெள்ளை வேர் புழு தாக்குதலை கட்டுபடுத்தலாம்

ஈரோடு, ஆக. 18

வேளாண் இணை இயக்குனர் (பொறுப்பு) முருகேசன் வெளியிட்டுள்ள செய் திகுறிப்பில் கூறியிருப்பதாவது: ஈரோடு மாவட்டத்தில் 75 ஆயிரம் ஏக்கரில் கரும்பு பயிரிடப்பட்டுள்ளது. இந்நிலையில் கடந்த சில மாதங்களாக கரும்பை வெள்ளை வேர் புழுக்கள் தாக்கி சேதப்படுத்துகிறது. இப்பூச்சியின்தாய் வண்டு. இது அடர் பழுப்பு நிறத்தில் இருக்கும். கோடை மழை பெய்ததும் மண்ணில் இருக்கும் கூட்டு புழுக்களில் இருந்து வெளிவந்து கரும்பின் தூர் பகுதியில் முட்டையிடும். ஒரு தாய் வண்டு 30 முட்டையிடும். இதில் வெளிவரும் புழுக்கள் நீரை கடித்து சேதப்படுத்தும். வளர்ந்து புழுக்கள் வெளிர் மஞ்சள் நிறத்தில் சதை பற்றுடன் பிறை நிலவு வடிவில் காணப்படும். இவற்றின் தாக்கத்தால் கரும்பு வாடி, வதங்கி, காயும். இப்பழு பருவம் 2 மாதமாகும். இவை அக்டோபர் முதல் ஏப்ரல் மாதம் வரை மண்ணுக்குள் உறக்க நிலையில் இருந்து ஜூன், ஜூலையில் வெளிவந்து தாக்கும். இவை வேம்பு, முருங்கை, கருவேல மரங்களில் கூட்டமாக அமர்ந்து ஓய்வெடுத்து கரும்பை தாக்கும். வேம்பு, முருங்கை, கருவேல் மரங்களில் கூட்ட மாக காணப்படும் வண்டுகளை கிளைகளை உலுக்கி விழ செய்து அவற்றை சேகரித்து தீயிட்டு அளிக்க வேண்டும். காய்ந்த தூருக்கு அடியில் உள்ள புழுவை கையால் சேகரித்து அளிக்க வேண்டும். 2, 3 நாள் தண்ணீரை தேய்ப்பதால் அவை இவை இறக்கும். விளக்கு பொறி ஏக்கருக்கு ஒன்று வைத்து தாய்வண்டை கவர்ந்து அளிக்கலாம். மெட்டாரைசீம் அனிசோபிலியே என்ற பச்சை பூஞ்சாணம் ஏக்கருக்கு தேவையான 2 கிலோ 200 கிலோ மத்திய தொழு உரம் மண் புழு உரத்துடன் கலந்து பயிருக்கு இட்டு மண் அமைக்கலாம். கரும்பின் வயது 10 மாதத்துக்கு மேல் இருந்தால் உடன் அறுவடை செய்யலாம். அதிக தாக்குதல் உள்ள இடத்தில் மாற்று பயிறாக நெல்லைப் பயிரிட்டு பின் கரும்பு பயிரிடலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## மேட்டூர் அணைக்கு கர்நாடகாவில் இருந்து கூடுதல் தண்ணீர் திறக்க கோரி விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

சேலம், ஆக. 18

தமிழ்நாடு ஏரி மற்றும் ஆற்று பாசன விவசாயிகள் சங்கத்தின் சார்பில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்ட கலெக்டர் அலுவலகம் அருகே நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பல்வேறு கோரிக்கைகளை முன்னிறுத்தி கோஷங்களை எழுப்பினர்.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

தமிழ்நாடு ஏரி மற்றும் ஆற்று பாசன விவசாயிகள் சங்கத்தின் சார்பில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்ட கலெக்டர் அலுவலகம் அருகே நடைபெற்றது. மாநில தலைவர் விஸ்வநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பல்வேறு கோரிக்கைகளை முன்னிறுத்தி கோஷங்களை எழுப்பினர். கூடுதல் தண்ணீர்குறிப்பாகடெல்டா பாசன விவசாயிகள் மேட்டூர் அணையை நம்பி விவசாயம் செய்து வருகின்றனர். தற்போது மேட்டூர் அணையில் தண்ணீர் இல்லாத சூழ்நிலையில் தண்ணீர்திறக்கும் அளவு குறைக்கப்பட்டுள்ளது. எனவே மேட்டூர் அணைக்கு கூடுதலாக தண்ணீர் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கர்நாடகா அரசு தமிழகத்திற்கு தேவையான தண்ணீரை விரைந்து வழங்க வேண்டும். மேலும் தமிழக அரசு நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2 ஆயிரத்து 500ம், மரவள்ளி கிழங்குக்கு டன்னுக்கு ரூ.20 ஆயிரம் வழங்க வேண்டும். கரும்பு டன்னுக்கு ரூ.4 ஆயிரம் வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தியும் விலைவாசி உயர்வை கட்டுப்படுத்தி விவசாய விளை பொருட்களுக்கு உரிய விலை கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். என்பது உள்ளிட்ட கோரிக்கை வலியுறுத்திப் பட்டன.

# தமிழ்நாடு சத்துணவு ஊழியர்கள் சங்கம் சார்பில் ரத்த கையெழுத்து போராட்டம்

திருவள்ளூர், ஆக. 18

சத்துணவு ஊழியர் சங்கத்தின் சார்பில் 5 அம்ச கோரிக்கையை வலியுறுத்தி போராட்டம். உதிரம்சிந்தி உரிமையைபெறுவோம் என்ற வகையில் ரத்தக் கையெழுத்து போராட்டம் நடைபெற்றது. திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றிய தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கத்தின் சார்பில் 5 அம்ச கோரிக்கையை வலியுறுத்தி பல்வேறு கட்ட போராட்டங்களை நடத்தியும் பயன் இல்லை என குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இந்நிலையில், தங்களது கோரிக்கையான காலை சிற்றுண்டி திட்டத்தை சத்துணவு ஊழியர்களை கொண்டு நிறைவேற்றிட வேண்டும் என்றும், காலி பணியிடங்களை போர்க்கால அடிப்படையில் உடனடியாக நிரப்ப வேண்டும் என்றும்,



தேர்தல் கால வாக்குறுதியான காலமுறை ஊதியம் வருவாய் கிராம உதவியாளர்களுக்கு வழங்குவதற்கு இணையான மாதாந்திர ஓய்வூதியம் ரூ.6,750ஐ அகவிலை படியுடன் வழங்க வேண்டும், பத்து வருடம் பணி முடித்த சத்துணவு ஊழியர்களுக்கு கல்வி தகுதி அடிப்படையில் அரசின் அனைத்து துறை காலி பணியிடங்களில் 50 சதவிகிதம் முன்னுரிமை அளித்து பணியில் சேர்த்திட வேண்டும், ஓய்வு பெறும் வயதை 60ல் இருந்து 62 ஆக உயர்த்தி வழங்கிட வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை நிறைவேற்றிட தமிழக அரசை வலியுறுத்தும் வகையில் இன்று உதிரம் சிந்தி உரிமையை பெறுவோம் என்ற வகையில் ரத்தக் கையெழுத்து போராட்டம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு, சங்கத்தின் எல்லாபுரம் ஒன்றிய தலைவர் வெ.தா.சிவலிங்கம் தலைமை தாங்கினார். ரவி, மலர்கொடி, மாரிமுத்து, சுப்பிரமணி, விஜயகுமார், துரை,பிருந்தா ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒன்றிய செயலாளர்தினேஷ் கோரிக்கைகள் குறித்து விளக்கிப் பேசினார். தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்ட செயலாளர் ராஜாஜி ரத்த கையெழுத்து இயக்கத்தை துவக்கி வைத்து பேசினார். மாவட்டத் தலைவர் சிவா சிறப்புரை ஆற்றி பேசினார். முன்னதாக, அனைவரையும் கல்பனா வரவேற்றார். முடிவில், காந்திமதி நன்றி கூறினார். இந்தப் போராட்டத்தில் ஒன்றிய நிர்வாகிகள், சரக பொறுப்பாளர்கள், அனைத்து அமைப்பாளர்கள், சமையலர்கள், சமையல் உதவியாளர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# வீட்டின் பூட்டை உடைத்து 15 பவுன் நகை கொள்ளை

சுவாமிமலை, ஆக. 18

பீரோவில் இருந்த ஒரு லட்சம் ரொக்கம், வெள்ளி பொருட்கள் ஆகியவையும் கொள்ளை போனது. கைரேகை நிபுணர்களை வரவழைத்துதடயங்களை சேகரித்து வருகின்றனர்.



தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் அடுத்த திருவிசநல்லூர் பெருமாள் கோவில் தெருவை சேர்ந்தவர் ராதாகிருஷ்ணன். இவர் கடந்த 11ந் தேதி திருச்சியில் உள்ள அவரது மகன் சங்கர் வீட்டிற்கு சென்றுள்ளார். இந்நிலையில், ராதாகிருஷ்ணன் நேற்று இரவு வீடு திரும்பியுள்ளார். அப்போது, வீட்டிற்கு வந்து பார்த்த போது வீட்டின் முன்பக்க கதவு உடைக்கப்பட்டிருந்தது. பின், உள்ளே சென்று பார்த்தபோது பீரோ உடைக்கப்பட்டு இருந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்தார். பின், பீரோவில் இருந்த 15 பவுன் நகை, ஒரு லட்சம் ரொக்கம், வெள்ளி பொருட்கள் ஆகியவை கொள்ளை போனது தெரியவந்தது. தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த திருவிடைமருதூர் துணை போலீஸ் சூப்பிரண்டு ஜாபர் சித்திக், போலீஸ் இன்ஸ்பெக்டர் ராஜேஷ் மற்றும் போலீசார் கொள்ளை சம்பவம் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர். தஞ்சை மோப்ப நாய், தடயவியல், கைரேகை நிபுணர்களை வரவழைத்து தடயங்களை சேகரித்து வருகின்றனர். கொள்ளை சம்பவத்தில் ஈடுபட்ட மர்மநபர்களைபோலீசார் தனிப்படை அமைத்து வலைவீசி தேடி வருகின்றனர். இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

# மயிலாடுதுறை அரசு ஆஸ்பத்திரியில் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் சென்டர் திறப்பு

தரங்கம்பாடி, ஆக. 18

மதுரைஎய்ம்ஸ் ஆஸ்பத்திரி கட்டுமான பணிகளுக்கான டெண்டர்கள் இறுதி செய்யப்பட்டு வருகிறது. மயிலாடுதுறையில் மருத்துவக்கல்லூரி அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.



மயிலாடுதுறை கிட்டப்பா நகராட்சி மேல்நிலைப் பள்ளியில் தமிழக சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தேசிய குடற்புழு நீக்க நாளை முன்னிட்டு மாணவர்களுக்கு மாத்திரைகளை வழங்கினார். தொடர்ந்து மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் சுமார்ரூ. 7 கோடியே 30 லட்சம் செலவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள எம் ஆர் ஐ ஸ்கேன் சென்டரை அமைச்சர் தொடங்கி வைத்தார். தொடர்ந்து மருத்துவமனையில் ரூ. 45 கோடி 50 லட்சம் மதிப்பீட்டில் கூடுதல் கட்டிடம் கட்டுமான பணியை பார்வையிட்டார். நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் மகாபாரதி, எம்.பி, ராமலிங்கம், எம்.எல்.ஏ.க்கள் ராஜகுமார் நிவேதா முருகன் பன்னீர்செல்வம் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் அரசு அதிகாரிகள் பங்கேற்றனர். பின்னர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேசியதாவது: தமிழகம் முழுவதும் மருத்துவர்கள் மற்றும் மருத்துவத்துறை பணியாளர்கள் பற்றாக்குறையை நீக்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் , மதுரையில் அமைய உள்ள எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுமான பணிகளுக்கான டெண்டர்கள் இறுதி செய்யப்பட்டு வருகிறது. விரைவில் இந்த பணிகள் துவங்கி 33 மாதங்களில் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை தமிழக அரசின்திட்டமானமாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி என்ற பெயரில் 6 மாவட்டங்கள் விடுபட்டுள்ளதாகவும், இதற்கு ஒன்றிய அரசின் ஒத்துழைப்பு தேவை என்றும் இதற்காக ஒன்றிய சுகாதாரத்துறை அமைச்சரை பலமுறை பார்த்து வந்துள்ளதாகவும் விரைவில் இதற்கான ஒப்புதல் கிடைக்கும் கிடைத்தவுடன் மயிலாடுதுறை மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களில் முதலில் மருத்துவக் கல்லூரிகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

# மாமல்லபுரம் புராதன சின்னம் பகுதியில் சி.ஆர்.பி "ரேபிட் ஃபோர்ஸ்" அதிரடிப்படை வீரர்கள் திடீர் ஆய்வு

மாமல்லபுரம், ஆக. 18

செங்கல்பட்டு மாவட்ட "ரிசர்வ்டு" பகுதிகளை மாவட்ட போலீசார் உதவியுடன் ஆய்வு செய்தனர். மாமல்லபுரம் புராதன சின்னம் பகுதிகளில் நேற்று இரவு பரபரப்பு கானப்பட்டது.



மத்திய ரிசர்வ் போலீசின் ஒரு பிரிவான "ரேபிட் ஃபோர்ஸ்"அதிரடிப்படை என்பது தேர்தல், பேரிடர், கலவரம், தீவிரவாத தாக்குதல் உள்ளிட்ட அவசர நிலை பாதுகாப்பிற்கு மத்திய அரசு பிரகடனம் செய்யும் போது ராணுவத்திற்கு இணையாக களமிறங்கும் படையாகும். இப்படையினர் ஆண்டிற்கு ஒருமுறை பல்வேறு மாநிலங்களில் இருக்கும் ரிசர்வ்டு பகுதிகளை ஆய்வு செய்து ஒத்திகை போன்று பாதுகாப்பு பயிற்சி எடுப்பது வழக்கம். அதேபோல் நேற்று செங்கல்பட்டு மாவட்ட "ரிசர்வ்டு" பகுதிகளை மாவட்ட போலீசார் உதவியுடன் ஆய்வு (பயிற்சி) செய்தனர். அதில் முக்கிய இடமாக மாமல்லபுரம் புராதன சின்னங்களான அர்சுனன்தபசு, ஐந்துரதம், கடற்கரை கோயில் ஆகியவை இடம் பெற்றிருந்தது. இதையடுத்து, நேற்று மாலை அப்பகுதிகளை கோவையில் இருந்து, துணை கமெண்டோ ஜின்சி பிலிப் தலைமையில் வந்திருந்த 30 ரேபிட் ஃபோர்ஸ் வீரர்கள் நவீன ரகதுப்பாக்கிகளுடன், திபு திபு என வாகனத்தில் இருந்து இறங்கி ஆய்வு பயிற்சியை மேற்கொண்டனர். பின்னர், அப்பகுதிகளை சுற்றி பார்த்து, நுழைவு வாயில், அவசர நிலைவெளியேற்றுபகுதி, தற்போதைய பாதுகாப்பு, காவல் நிலைய தூரம், மருத்துவமனை தூரம், உள்ளிட்டவை குறித்துகள ஆய்வு செய்தனர். கடைசியாக கடற்கரை கோயிலை சுற்றி பார்த்து ஆய்வு பயிற்சி செய்த பின்னர் அனைவரும் குழுவாக புகைப்படம் எடுத்தனர். இதனால் மாமல்லபுரம் புராதன சின்னம் பகுதிகளில் நேற்று இரவு பரபரப்பு கானப்பட்டது. பின்னர் இது அவசரநிலை பாதுகாப்பு பயிற்சி ஒத்திகை என்பது பகுதி மக்களுக்கு தெரியவந்தது.

# ஈரோடு வ.உ.சி. மார்க்கெட்டில் தக்காளி விலை குறைந்தது

ஈரோடு, ஆக. 18

இன்று தக்காளி விலை மேலும் குறைந்தது. தக்காளி சில்லரை விற்பனையில் ரூ. 40க்கு விற்பனையானது.மேலும் படிக்க: ஈரோடு வ.உ.சி. காய்கறி மார்க்கெட்டிற்கு தாளவாடி, தாராபுரம், திருப்பூர், கிருஷ்ணகிரி, ஆந்திரா, ஒட்டன்சத்திரம் போன்றபகுதியில்இருந்து தக்காளிகள் விற்பனைக்கு கொண்டுவரப்படும். வழக்கமாக சாதாரண நாட்களில் 7000 தக்காளி பெட்டிகள் விற்பனைக்கு கொண்டுவரப்படும். இதனால் கடந்த 2 மாதங்களுக்கு முன்பு ஒரு கிலோ தக்காளி ரூ.10 முதல் 20 வரை விற்பனையானது. ஆனால் அதன் பிறகு பல்வேறு காரணங்களால் தக்காளி விளைச்சல் பாதிக்கப்பட்டு தமிழ்நாடு முழுவதும்தக்காளிவரத்து



குறைய தொடங்கியது. இதனால் தக்காளி விலை உயர தொடங்கியது. சென்னை போன்ற பெருநகரங்களில் ஒரு கிலோ தக்காளி ரூ.200ஐ கடந்தது. ஈரோட்டில் ஒரு கிலோ தக்காளி ரூ.160க்கு விற்பனையானது. ஈரோட்டில் 600 முதல் 800 பெட்டிகள் மட்டுமே விற்பனைக்கு கொண்டு வரப்பட்டன. தக்காளி விலை உயர்வால் பொது மக்கள் பெண்கள் கடும் அதிர்ச்சி அடைந்தனர். இதனையடுத்து கடந்த சில நாட்களாக தக்காளி வரத்து சற்று அதிகரிக்க தொடங்கியதால் விலையும் சரிய தொடங்கியது. ஒரு கிலோ 160க்கு விற்கப்பட்ட தக்காளி படிப்படியாக குறைந்து ரூ.100க்கு விற்பனையானது. கடந்த ஒரு வாரமாக மேலும் விலை குறைந்து ரூ.50 முதல் 60 வரை விற்பனையாகி வந்தது. இந்நிலையில் இன்று ஈரோடு வ.உ.சி. காய்கறி மார்க்கெட்டிற்கு ஆந்திரா, கிருஷ்ணகிரி, தாராபுரம் தாளவாடி போன்ற பகுதிகளில் இருந்து 5000 தக்காளி தக்காளி பெட்டி கள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டன. வரத்து அதிகரிப்பால் இன்று தக்காளி விலை மேலும் குறைந்தது. இன்று ஒரு கிலோ தக்காளி சில்லரை விற்பனையில் ரூ. 40க்கு விற்பனையானது. சுமாரான தக்காளி ரூ.50க்கு விற்பனையானது. இனி வரக்கூடிய நாட்களில் வரத்து மேலும் அதிகரித்து தக்காளி விலை மேலும் குறையும் என வியாபாரிகள் நம்பிக்கை தெரிவித்தனர்.

# கிருஷ்ணகிரியில் ஆசிரியர் தகுதித்தேர்விற்கான இலவச பயிற்சி வகுப்புகள்

கிருஷ்ணகிரி, ஆக. 18

ஆசிரியர் தகுதித்தேர்வு தாள் 1, தாள் 2 தேர்விற்கான இலவச பயிற்சி வகுப்புகள், கிருஷ்ணகிரி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் வருகிற 21ந் தேதி முதல் நடைபெற உள்ளது. இப்பயிற்சி சேர விருப்பமுள்ளவர்கள் கூகுள் பார்மில் பதிவு செய்து கொள்ளலாம்.

கிருஷ்ணகிரி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் வருகிற 21ந் தேதி முதல் ஆசிரியர் தகுதித் தேர்விற்கான இலவச பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகிறது.

இது குறித்து மாவட்ட கலெக்டர் கே.எம்.சரயு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

கிருஷ்ணகிரி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில்தன்னார்வ பயிலும் வட்டம் செயல்பட்டு வருகிறது. இங்கு அரசு, வங்கி தேர்வுகளுக்கு இலவச பயிற்சி அளிக்கப்படுகிறது. தற்போது, தமிழ்நாடு ஆசிரியர் பணியாளர் தேர்வு வாரிய ஆண்டு திட்ட நிரலில், இடைநிலை ஆசிரியர் பணிக்கு தோராயமாக 6,553 காலிபணியிடங்களும், பட்டதாரி ஆசிரியர் பணிக்கு தோராயமாக 3,587 காலிபணியிடங்கள் தேர்வு நடத்த உள்ளதாக அறிவித்துள்ளது.

அதன்படி ஆசிரியர் தகுதித்தேர்வு தாள் 1, தாள் 2 தேர்விற்கான இலவச பயிற்சி வகுப்புகள், கிருஷ்ணகிரி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் வருகிற 21ந் தேதி முதல் நடைபெற உள்ளது. இப்பயிற்சி சேர விருப்பமுள்ளவர்கள் கூகுள் பார்மில் பதிவு செய்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு 04343 291983 என்கிற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம். எனவே, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தகுதி வாய்ந்த நபர்கள், ஆசிரியர் தகுதி தேர்விற்கான இலவச பயிற்சி வகுப்பில் சேர்ந்து பயன்பெறலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# சேலம் கோட்டத்தில் முகூர்த்த தினத்தை முன்னிட்டு கூடுதலாக 150 சிறப்பு பஸ்கள்

சேலம், ஆக. 18

சேலம் மண்டலத்தில் 1047 பஸ்களும், தர்மபுரி மண்டலத்தில் 853 பஸ்களும் தினசரி இயக்கப்பட்டு வருகிறது. நாளை முதல் வருகிற 21ந்தேதி வரை 150 சிறப்பு பஸ்கள் கூடுதல் நடைகள் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.



சேலம் கோட்ட போக்குவரத்து கழகம் சார்பில் சேலம் மண்டலத்தில் 1047 பஸ்களும், தர்மபுரி மண்டலத்தில் 853 பஸ்களும் தினசரி இயக்கப்பட்டு வருகிறது. சிறப்பு பஸ்கள் இந்த நிலையில் வார இறுதி நாட்கள் மற்றும் திருமண முகூர்த்தத்தை முன்னிட்டு சேலம் கோட்டம் மூலம் பல்வேறு வழித்தடங்களில் நாளை முதல் வருகிற 21ந்தேதி வரை 150 சிறப்பு பஸ்கள் கூடுதல் நடைகள் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த பஸ்கள் சேலத்தில் இருந்து சென்னை, மதுரை, பெங்களூருவுக்கும், ஒசூரில் இருந்து சென்னை, திருச்சி, மதுரைக்கும், நாமக்கல்லில் இருந்து சென்னைக்கும், திருச்சியில் இருந்து ஒசூருக்கும் இயக்கப்பட உள்ளது. மேலும் சேலத்தில் இருந்து கோவை, திருப்பூர், திருவண்ணாமலை, சிதம்பரம் பஸ் நிலையங்களுக்கும் இயக்கப்பட உள்ளது. அதேபோல் சென்னையில் இருந்து சேலம், நாமக்கல், ஒசூர், தர்மபுரி, மேட்டூருக்கும் சிறப்பு பஸ்கள் இயக்கப்படுகிறது. பாதுகாப்பான பயணம் எனவே பயணிகள் அனைவரும் கூட்ட நெரிசலை தவிர்த்து பாதுகாப்பான பயணம் செய்திடும்படி போக்குவரத்து கழக சேலம் கோட்ட நிர்வாக இயக்குநர் பொன்முடி தெரிவித்துள்ளார்.

# ராமேஸ்வரத்தில் மீனவர்களுடன் கலந்துரையாடிய முதல்வர் ஸ்டாலின்

ராமநாதபுரம், ஆக. 18

வாக்குச்சாவடி முகவர்கள் பயிற்சி பாசறை கூட்டத்தைமுடித்துக்கொண்டு முதல்வர் ராமேஸ்வரம் சென்றார். அங்கு மீனவர்கள், அவர்களது குடும்பத்தினரைச் சந்தித்து முதல்வர் ஸ்டாலின் கலந்துரையாடினார்



தி.மு.க. தென்மண்டல அளவிலான வாக்குச்சாவடி முகவர்கள் பயிற்சி பாசறை கூட்டம் இன்று ராமநாதபுரத்தில் நடைபெற்றது. . தி.மு.க. தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின்தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் தென்மாவட்டங்களில் உள்ள 10 பாராளுமன்ற தொகுதிகளுக்கு உட்பட்ட வாக்குச்சாவடி முகவர்கள் கலந்து கொண்டனர். இந்தக் கூட்டத்தில் கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள், முகவர்கள் மத்தியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசினார். இந்த கூட்டத்தை முடித்து கொண்டு முதலமைச்சர் ராமேஸ்வரம் சென்றார். இந்நிலையில், ராமேஸ்வரத்தில் மீனவர்கள், அவர்களது குடும்பத்தினரைச் சந்தித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்துரையாடினார் அக்காள்மடம், சேதுபதிநகர் உள்ளிட்ட பகுதிகளில் வசிக்கும் மீனவர்களின் வீட்டிற்கு நேரடியாக சென்று முதலமைச்சர் ஸ்டாலின் கலந்துரையாடினார்.

# அரசு பள்ளியில் ஐம்பெரும் விழா

வேதாரண்யம், ஆக. 18

வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. இதில் ஆசிரியர்கள், மாணவ மாணவிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

வேதாரண்யம் தாலுகா தாணிக்கோட்டகம் அரசு மேல்நிலைப் பள்ளியில் இலக்கிய மன்ற விழா விளையாட்டு விழா ஆண்டு விழா பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசளிப்பு விழா 100 சதவீதம் தேர்ச்சிக்கு பாடுபட்ட ஆசிரியர்களுக்கு பாராட்டு விழா என ஐம்பெரும்விழாக்கள் நடைபெற்றது. விழாவிற்கு பள்ளி தலைமை ஆசிரியர்தமிழ்ச்செல்வன் தலைமை வகித்தார். நிகழ்ச்சியில் பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் முரசொலி சிங்காரம் கலந்துகொண்டு போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கும் 100 சதவீதம் தேர்ச்சிக்கு பாடுபட்ட ஆசிரியர்களுக்கும் பரிசுகளை வழங்கினார் நிகழ்ச்சியில் டாக்டர் ரவிபெற்றோர் ஆசிரியர் கழக துணைத் தலைவர் அன்பழக பாண்டியன் பொருளாளர் சுடர் வழி ஊராட்சி மன்ற தலைவர் முருகானந்தம் ஒன்றிய குழு உறுப்பினர் வைத்திய நாதன்பள்ளிமேலாண்மை குழு தலைவர் வனிதா தேத்தாக்குடி அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் தொல்காப்பியன் அஞ்சுகம் முத்துவேளாளர் அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் சிங்காரவேலன் உள்ளத்தை ஆசிரியர்கள் மாணவ மாணவிகள் பெற்றோர் ஆசிரியர் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

# தூய்மை பணியாளர்கள் சாலை மறியல்

சென்னை, ஆக. 18

தலைமைச்செயலகத்தின் எதிரில் திடீர் சாலை மறியலில் பெண்கள் ஈடுபட முயன்றனர். அரசாணையை காணவில்லை என்று கூறிய அதிகாரிகளை கண்டித்து சாலை மறியல் செய்ய முயன்றனர்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் பல்வேறு அரசு மேல் நிலைப்பள்ளிகள், உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் அரசு அலுவலகங்களில் பணியாற்றி வரும் துப்புரவு பணியாளர்களை பணிநிரந்தரம் செய்யக் கோரியும், ஓய்வூதியம் வழங்க கோரியும், தலைமைச்செயலகத்தின் எதிரில்திடீர்சாலை மறியலில் பெண்கள் ஈடுபட முயன்றனர். தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்த தூய்மை பணியாளர்களை நிரந்தர பணியாளர்களாக நியமனம் செய்து கடந்த 9512ம் ஆண்டு 614 பேர்களுக்கு அரசாணை வெளியிடப்பட்டது.

இதில் பெரும்பாலான நபர்களுக்கு பலன்கள் கிடைத்துள்ள நிலையில் கன்னியாகுமரி மாவட்டத்தை சேர்ந்த 20 பேருக்கு பணப்பலன்கள் மற்றும் ஓய்வூதியம் கிடைக்கவில்லை. இது தொடர்பான அரசாணையை காணவில்லை என்று கூறிய அதிகாரிகளை கண்டித்து சாலை மறியல் செய்ய முயன்றனர்.

இதனால் கோட்டை முன்பு பரபரப்பாக காணப்பட்டது.



# அஜித்துடன் இணையும் தனுஷ்.. எதிர்பார்ப்பில் ரசிகர்கள்



அஜித்தின் 'விடாமுயற்சி' படப்பிடிப்பு விரைவில் தொடங்கப்படவுள்ளது. தனுஷின் 'கேப்டன் மில்லர்' திரைப்படம் டிசம்பர் 15ஆம் தேதி வெளியாகவுள்ளது.

எச். வினோத் இயக்கத்தில் வெளியான 'துணிவு' படத்தின் வெற்றியைத்தொடர்ந்து நடிகர் அஜித் இயக்குனர் மகிழ்திருமேனி இயக்கத்தில் 'விடாமுயற்சி' திரைப்படத்தில் நடிக்கவுள்ளார். இப்படத்தின் படப்பிடிப்பு விரைவில் தொடங்கப்படவுள்ளது. இதே போன்று நடிகர் தனுஷ், இயக்குனர் அருண் மாதேஸ்வரன் இயக்கத்தில் 'கேப்டன் மில்லர்' திரைப்படத்தில் நடித்துள்ளார். இப்படம் வருகிற டிசம்பர் 15ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. இந்நிலையில், நடிகர்கள் அஜித், தனுஷ் மற்றும் பரத் இணைந்து நடிக்கவுள்ளதாககூறப்படுகிறது. அதாவது, இயக்குனர் செல்வராகவன் இயக்கத்தில் நடிகர் அஜித், தனுஷ் மற்றும் பரத் இணைந்து நடிக்கவுள்ளதாகவும் இந்த படம் உறுதியானால் தன் வாழ்க்கை வேறு மாதிரி மாறிவிடும் என பரத் நேர்காணல் ஒன்றில் தெரிவித்துள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

# லியோ படம் முடித்த கையோடு BMW கார் வாங்கிய லோகேஷ் கனகராஜ்



மாநகரம் படத்தின் மூலம் தமிழ் திரையுலகிற்கு இயக்குனராக அறிமுகமானவர் லோகேஷ் கனகராஜ். அதன்பின்னர் கைதி, மாஸ்டர், விக்ரம் படங்களை இயக்கி தனக்கான இடத்தை பிடித்து கொண்டார். இவர் தற்போது விஜய் நடிப்பில் உருவாகி வரும் லியோ படத்தை இயக்கியுள்ளார். இப்படத்தை செவன் ஸ்கிரீன் ஸ்டூடியோஸ் சார்பில் லலித் குமார் தயாரிக்கிறார். அர்ஜூன், சஞ்சய் தத், திரிஷா, பிரியா ஆனந்த், மன்சூர் அலிகான், மிஷ்கின், கௌதம் வாசுதேவ் மேனன், சாண்டி, மேத்யூ தாமஸ் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கும் இப்படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார். வைரலாகும் புகைப்படம் இந்நிலையில், இயக்குனர் லோகேஷ் கனகராஜ் புதிதாக BMW 7 சீரிஸ் கார் வாங்கியுள்ளதாகவும் இதன் விலை ரூ.1.70 கோடி எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

# விறுவிறுப்பான புலனாய்வு த்ரில்லராக உருவாகும் 'லெவன்'




'கலகலப்பு 2', 'வந்தா ராஜாவா தான் வருவேன், மற்றும் 'ஆக்‌ஷன்' ஆகிய திரைப்படங்களில் இயக்குனர் சுந்தர். சியிடம் உதவி இயக்குனராக பணியாற்றிய லோகேஷ் அஜில்ஸ் இயக்கத்தில் உருவாகும் திரைப்படம் 'லெவன்'. தமிழ் மற்றும் தெலுங்கு ஆகிய இரு மொழிகளில் ஒரே நேரத்தில் உருவாக உள்ள இத்திரைப்படத்தில் 'சரபம்', 'சிவப்பு' மற்றும் 'பிரம்மன்' உள்ளிட்ட படங்களில் நடித்த நவீன் சந்திரா நாயகனாக நடிக்கிறார். மேலும், 'சில நேரங்களில் சில மனிதர்கள்' படத்தில் நடித்துள்ள ரியா ஹரி நாயகியாக நடிக்கும் இப்படத்தில் 'விருமாண்டி' புகழ் அபிராமி, 'வத்திக்குச்சி' புகழ் திலீபன், 'மெட்ராஸ்' புகழ் ரித்விகா உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். ஏ.ஆர்.என்டர்டெயின்மெண்ட் நிறுவனம் சார்பில் அஜ்மல் கான் மற்றும் ரியா ஹரி தயாரிக்கும் இப்படத்திற்கு டி. இமான் இசையமைக்கிறார். கார்த்திக் அசோகன் ஒளிப்பதிவை கவனிக்கிறார். 'லெவன்' திரைப்படம் குறித்து இயக்குனர் லோகேஷ் அஜில்ஸ் பேசியதாவது, "ஆரம்பம் முதல் இறுதி வரை பார்வையாளர்களை இருக்கையின் நுனிக்கே கொண்டு வரும் விறுவிறுப்பான புலனாய்வு த்ரில்லராக 'லெவன்' அமையும். திறமைமிக்க நடிகர்கள் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்கள் இப்படத்திற்காக இணைந்துள்ளார்கள், அவர்களுக்கும் இப்படத்தின் தயாரிப்பாளர்களுக்கும் எனது நன்றி. அனைவரையும் கவரும் விதத்தில் திரைப்படம் அமையும் என்று நம்புகிறேன்" என்று கூறினார். 'லெவன்' படத்தின் படப்பிடிப்பு ஆகஸ்ட் 23ஆம் தேதி தொடங்கவுள்ளது குறிப்பிடத்தக்கது.



# மத்தகம் கதை முதல்ல பைபிள் பேர்ல இருந்தது... அதர்வா



இயக்குனர் பிரசாத் முருகேசன் இயக்கத்தில் அதர்வா, மணிகண்டன் மற்றும் நிகிலா விமல் நடிப்பில் உருவாகியுள்ள வெப்தொடர் 'மத்தகம்'. இந்த வெப்தொடரில் கவுதம் மேனன், தில்னாஸ் இராணி, இளவரசு, டிடி (திவ்யதர்ஷினி), வடிவுக்கரசி, அருவி திருநாவுக்கரசு, மூணாறு ரமேஷ், சரத் ரவி, ரிஷி காந்த் மற்றும் முரளி அப்பாஸ் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். இந்த வெப்தொடரை ஸ்கிரீன் சீன் மீடியா எண்டர்டெயின்மெண்ட் தயாரித்துள்ளது. இதன் டீசர் மற்றும் டிரைலர் சமீபத்தில் வெளியாகி கவனம் பெற்றது. நேரடியாக ஓடிடி தளத்தில் வெளியாகவுள்ள இந்த வெப்தொடருக்கு தர்புகா சிவா இசையமைத்துள்ளார். எட்வின்சாகேஒளிப்பதிவுசெய்துள்ளார். இந்தவெப்தொடர் ஆகஸ்ட் 18ஆம் தேதி டிஸ்னி பிளஸ் ஹாட் ஸ்டார் ஓடிடி தளத்தில் தமிழ், இந்தி, தெலுங்கு, மலையாளம், கன்னடம், மராத்தி மற்றும் பெங்காலி ஆகிய ஏழு மொழிகளில் வெளியாகவுள்ளது. இந்நிலையில் 'மத்தகம்' வெப் தொடர் குழுவினர்பத்திரிகையாளர்களைசந்தித்தனர். இதில்நடிகர்அதர்வாபேசியதாவது, "மத்தகம் இப்ப ரிலீஸாகுது, ஆனா இது 2018, 2019ஆம் ஆண்டு ஆரம்பிச்சது. கவுதம் மேனன் சார் தான் இயக்குனர் பிரசாத் முருகேசனை அறிமுகம் செய்து வைத்தார். இந்தக் கதை முதல்ல பைபிள் பேர்ல இருந்தது. பல மாற்றங்கள் வந்தது. எப்படி வரப்போகுதுன்னு தயக்கம் இருந்தது. இப்ப வரக்காரணம் டிஸ்னி பிளஸ் ஹாட் ஸ்டார் தான், அவங்களுக்கு ரொம்ப நன்றி. பிரசாத் சார் இந்த கதையை குயினுக்கு முன்னாடியே எழுதிட்டார். மத்தகம் கதை ரொம்ப சூப்பரா வந்திருக்கு. அவர்நினைச்சத கொண்டுவந்துருக்காரு. முழுக்கநைட்லதான்ஷூட் பண்ணோம். லைட் ஆஃப் பண்ணி எடுத்தாங்க, நான் தெரிவனா தெரிய மாட்டேனானு சந்தேகமா இருந்தது. ஆனா நான் நடிச்சதில் பெஸ்ட்டாக இருக்கும். இப்ப நான் எங்க போனாலும் மணிகண்டன் பத்தி கேட்குறாங்க. அவர் கூட 2 நாள் தான் ஷூட் அப்பவும்தனித்தனியாவச்சுஎடுத்தாங்க. உண்மையிலமணிரொம்பஹானஸ்டான மனிதர் அவர் கூட வேலை பார்த்தது சந்தோசம்" என்று பேசினார்.

# இந்தியன் 2 படக்குழுவினருடன் பிறந்தநாளை கேக் வெட்டி கொண்டாடிய ஷங்கர்

தமிழ்திரையுலகின்முன்னணி இயக்குனராக இருப்பவர்ஷங்கர். இவர்தற்போது இந்தியன் 2 திரைப்படத்தை இயக்கி வருகிறார்.

தமிழ் திரையுலகின் முன்னணி இயக்குனரான ஷங்கர் பிரமாண்ட இயக்குனராக வலம் வருகிறார். தன் ஒவ்வொரு படத்திலும் எதாவது ஒரு இடத்தில் பிரமாண்டத்தை புகுத்தி 90களில் இருந்து தற்போது வரை ரசிகர்களை தன்வசப்படுத்தியுள்ளார். இவரின் முதல் படமான 'ஜென்டில்மேன்' திரைப்படத்திலேயே 2டி அனிமேஷன் போன்றவற்றை பயன்படுத்தி தனக்கான இடத்தை உருவாக்கினார். தொடர்ந்து ரஜினி, கமல், விஜய் என முன்னணி நடிகர்களுடன் பணிபுரிந்து பல வெற்றி படங்களை கொடுத்துள்ளார். இயக்குனர் ஷங்கர் தற்போது கமல் நடிப்பில் 'இந்தியன் 2' திரைப்படத்தை இயக்கி வருகிறார். 27 வருடங்களுக்கு பிறகு உருவாகும் இப்படத்தில் சமுத்திரக்கனி, பாபி சிம்கா, காஜல் அகர்வால், சித்தார்த், ராகுல் பிரீத் சிங், பிரியா பவானி சங்கர் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்து வருகின்றனர். லைகா நிறுவனம் தயாரிக்கும் இப்படம் அடுத்த ஆண்டு வெளியாகும் என கூறப்படுகிறது. ஷங்கரின் 60வது பிறந்த நாளையொட்டி திரைப்பிரபலங்கள் பலர் அவருக்கு தங்களது வாழ்த்துகளை தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில், ஷங்கர் 'இந்தியன் 2' படக்குழுவினருடன் பிறந்த நாளை கேக் வெட்டி கொண்டாடியுள்ளார். இது தொடர்பான புகைப்படம் சமூக வலைதளத்தில் அதிகம் பகிரப்பட்டு வருகிறது.

# ஒரே வாரத்தில் வசூலில் அலப்பறை கிளப்பிய ஜெயிலர்.. அதிகாரப்பூர்வ அறிவிப்பு



இயக்குனர்நெல்சன்திலீப்குமார் இயக்கத்தில் ரஜினி நடிப்பில் உருவாகியுள்ள திரைப்படம் 'ஜெயிலர்'. இப்படம் ஆகஸ்ட் 10 ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்று வருகிறது. 'ஜெயிலர்' திரைப்படத்தில் மலையாள நடிகர் மோகன்லால், கன்னட நடிகர் சிவராஜ்குமார், ரம்யாகிருஷ்ணன், யோகிபாபு, வசந்த் ரவி, விநாயகன் உள்ளிட்ட திரைப்பிரபலங்கள் பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளதால் ரசிகர்கள் இப்படத்தை திரையரங்குகளில் கொண்டாடி வருகின்றனர். ஜெயிலர் போஸ்டர் மேலும், 'ஜெயிலர்' திரைப்படத்திற்கு முதலமைச்சர் மு.கஸ்டாலின், கமல்ஹாசன், விஜய் என பலர் தங்களது வாழ்த்துகளை தெரிவித்தனர். இந்நிலையில், இப்படத்தின் வசூல் குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. அதன்படி, 'ஜெயிலர்' திரைப்படம் வெளியான ஒரே வாரத்தில் ரூ.375.40 கோடியை கடந்துள்ளது. இதனை படக்குழு போஸ்டரை பகிர்ந்து அறிவித்துள்ளனர். இந்த அறிவிப்பால் ரசிகர்கள் கொண்டாட்டத்தில் உள்ளனர்.

# முதல் 20 ஓவர் போட்டி இந்தியா, அயர்லாந்து இன்று மோதல்: பும்ரா 11 மாதங்களுக்கு பிறகு விளையாடுகிறார்



இந்திய அணியின் முன்னணி வேகப்பந்து வீரரான ஜஸ்பிரீத் பும்ரா 11 மாதங்க ளுக்கு பிறகு சர்வதேச போட்டியில் ஆடுகிறார் முழு உடல் தகுதி பெற்றதால் பும்ரா அயர்லாந்துக்கு எதிரான 20 ஓவர் தொடரில் கேப்டனாக நியமிக்கப்பட்டு உள்ளார்.

ஜஸ்பிரீத் பும்ரா தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி மூன்று 20 ஓவர் போட்டிகளில் விளையாடுவதற்காக அயர்லாந்து சென்று உள்ளது. இந்தியாஅயர்லாந்து அணிகள் மோதும் முதல் 20 ஓவர் ஆட்டம் டுப்ளின் நகரில் நாளை (வெள்ளிக் கிழமை) நடக்கிறது. இந்திய அணியின் முன்னணி வேகப்பந்து வீரரான ஜஸ்பிரீத் பும்ரா 11 மாதங்க ளுக்கு பிறகு சர்வதேச போட்டியில் ஆடுகிறார். முதுகின் அடிப்பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக கடந்த ஆண்டு செப்டம்பர் மாதத்துக்கு பிறகு அவர் எந்தவித போட்டியிலும் விளையாடவில்லை. கடந்த ஆண்டு நடந்த ஆசிய கோப்பை (20ஓவர்) மற்றும் 20ஓவர்உலக கோப்பை போட்டிகளைதவறவிட்டார். காயத்துக்காக பும்ரா ஆபரேஷன் செய்து கொண்டார். இதனால் அவர் கடந்த ஐபிஎல் சீசனிலும் , உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டியிலும் ஆடவில்லை. முழு உடல் தகுதி பெற்றதால் பும்ரா அயர்லாந்துக்கு எதிரான 20 ஓவர் தொடரில் கேப்டனாக நியமிக்கப்பட்டு உள்ளார். அயர்லாந்து தொடரில் 2வது கட்ட இந்திய அணியே விளையாடுகிறது. கேப்டன் ஹர்திக் பாண்ட்யா, சூர்யகுமார் யாதவ் உள்ளிட்ட முன்னனி வீரர்கள் ஆடவில்லை. ருதுராஜ் கெய்க்வாட், ஷிவம்துபே, அவேஷ்கான், ஜிதேஷ்சர்மா, ரிங்குசிங், ஷபாஸ் அகமது உள்ளிட்ட வீரர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்திய அணி வெற்றியுடன் கணக்கை தொடங்கும் ஆர்வத்தில் உள்ளது. சமீபத் தில் இந்திய அணி வெஸ்ட் இண்டீசிடம் 20 ஓவர் தொடரை இழந்து இருந்தது. இந்திய அணி அயர்லாந்தில் 3வது முறையாக விளையாடுகிறது. 2018ம் ஆண்டு 2 போட்டிக்கொண்ட 20 ஓவர் தொடரை 20 என்ற கணக்கிலும், கடந்த ஆண்டு 20 என்ற கணக்கிலும் கைப்பற்றி இருந்தது. அயர்லாந்துக்கு எதிராக இதுவரை நடந்த 5 போட்டி யிலும் இந்தியா வெற்றி பெற்று இருக்கிறது. 2009ம் ஆண்டு இங்கிலாந்தில் நடந்த 20 ஓவர் உலக கோப்பையில் 8 விக்கெட் வித்தியாசத்தில் அயர்லாந்தை வீழ்த்தி இருந்தது. அயர்லாந்துக்கு எதிராக தோல்வியை சந்திக்காததால் அந்த அணியை இந்தியாநம்பிக்கையுடன்எதிர்க்கொள்ளும். பால்பிரீன்தலைமையிலானஅயர்லாந்து அணி இந்தியாவுக்கு அதிர்ச்சி கொடுத்து முதல் முறையாக வெற்றி பெறும் ஆர்வத்தில் இருக்கிறது. நாளைய ஆட்டம் இந்திய நேரப்படி இரவு 7.30 மணிக்கு நடக்கிறது. ஜியோசினிமா, ஸ்போர்ட்ஸ்18ஆகியவற்றில்நேரடியாகஒளிபரப்புசெய்யப்படுகிறது. இரு அணி வீரர்கள் வருமாறு: இந்தியா: ஜஸ்பிரீத் பும்ரா (கேப் டன்), ருதுராஜ் கெய்க்வாட், ஜெய்ஷ்வால், திலக் வர்மா, ரிங்கு சிங், வாஷிங்டன் சுந்தர், ஷிவம் துபே, ஷபாஸ் அகமது, சஞ்சு சாம்சன், ஜிதேஷ் சர்மா, ரவி பிஷ்னோய், பிரசித் கிருஷ்ணா, அர்தீப்சிங், முகேஷ்குமார், அவேஷ்கான். அயர்லாந்து: ஆண்டி பால்பிரீன், ஹேரி டெக்டர், ரோஸ் ஆதிர், லார்கன் டக்கரி, மார்க் ஆதிர், கேம்பர், கேரீத் டெலினி, டாக்ரெல், பின்ஹோண்ட், ஜோஸ் லிட்டில், பென் ஒயிட், கிரேங்யங், வோயர் காம், மெக்கார்த்தி.

# ஒருநாள் உலக கோப்பை கிரிக்கெட் தொடர் இங்கிலாந்து அணி அறிவிப்பு



உலக கோப்பை கிரிக்கெட் போட்டி தொடர் (50 ஓவர்) அக்டோபர் 5 முதல் நவம்பர் 19 வரை இந்தியாவில் நடைபெறுகிறது. இந்தியா, ஆஸ்திரேலியா, பாகிஸ்தான், இங்கிலாந்து, தென்ஆப்பிரிக்கா, நியூசிலாந்து, வங்காளதேசம், ஆப்கானிஸ்தான், இலங்கை, நெதர்லாந்து ஆகிய 10 நாடுகள் பங்கேற்கின்றன. அகமதாபாத்தில் நடைபெறும் உலக கோப்பை போட்டியின் தொடக்க ஆட்டத்தில் நடப்பு சாம்பியன் இங்கிலாந்து, நியூசிலாந்து அணிகள் மோதுகின்றன. இந்திய அணி முதல் ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவை அக்டோபர் 8ம் தேதி சென்னையில் சந்திக்கிறது. இந்நிலையில், உலககோப்பைதொடருக்கானதற்காலிகஇங்கிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது. சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியிலிருந்து ஓய்வை அறிவித்த பென் ஸ்டோக்ஸ் தற்போது அந்த முடிவை திரும்பப் பெற்றுள்ளார் . இதனால் பென் ஸ்டோக்ஸ் உலக கோப்பை தொடருக்கான இங்கிலாந்து அணியில் இடம்பெற்றுள்ளார். இங்கிலாந்துஅணியின்நட்சத்திர பந்துவீச்சாளர் ஜோப்ரா ஆர்ச்சர், பேட்ஸ்மேன் ஹாரி ப்ரூக் அணியில் இடம்பெறவில்லை. உலக கோப்பைக்கான தற்காலிக இங்கிலாந்து அணி: ஜோஸ் பட்லர் (கேப்டன்), மொயீன் அலி, கஸ் அட்கின்சன், ஜானி பேர்ஸ்டோவ், சாம் கரன், லியாம் லிவிங்ஸ்டன், டேவிட் மலான், அடில் ரஷித், ஜோ ரூட், ஜேசன் ராய், பென் ஸ்டோக்ஸ், ரீஸ் டாப்லி, டேவிட் வில்லி, மார்க் வுட், கிறிஸ் வோக்ஸ்.



# உலக கோப்பை வில்வித்தை இறுதிப்போட்டிக்கு இந்தியா தகுதி

பிரான்சில் நடைபெற்று வரும் உலக கோப்பை 4ம் நிலை வில்வித்தை போட்டியின் காம்பவுண்ட் அணிகள் பிரிவில் இந்திய ஆண்கள் மற்றும் மகளிர் அணியினர் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றனர். இதனால் இந்தியாவுக்கு இரண்டு பதக்கங்கள் உறுதியானது. ஆண்கள் அணிகள் பிரிவில் இந்தியாவின் ஒஜாஸ் தியோடெல், பிரதமேஷ் ஜவகர், அபிஷேக் வர்மா ஆகியோர் அடங்கிய அணி தென் கொரியாவை எதிர் கொண்டது. இந்த ஆட்டம் 235235 என்ற கணக்கில் 'டிரா' ஆனது. டை பிரேக்கில் இந்தியா வெற்றி பெற்றது. இறுதிப் போட்டியில் அமெரிக்காவை சந்திக்கிறது. மகளிர் அணிகள் பிரிவு அரை இறுதியில் இந்தியாவின் ஜோதி சுரேகா, அதிதி சுவாமி, பர்னீத்கபூர் ஆகியோர் அடங்கிய அணி 234233 என்ற கணக்கில் இங்கி லாந்தை தோற்கடித் தது. இறுதிப் போட்டியில் மெக்சிகோவுடன் மோதுகிறது.

# சின்சினாட்டி ஓபன் டென்னிஸ் இத்தாலி வீரர் சின்னர் அதிர்ச்சி தோல்வி



சின்சினாட்டி ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி தொடர் அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது. இந்த மாதம் 12ம் தேதி தொடங்கி 20ம் தேதி வரை இந்த தொடர் நடைபெறுகிறது. பல முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர். இந்நிலையில், ஆண்கள் ஒற்றையர் பிரிவின் 2வது சுற்று போட்டிகள் நேற்று நடந்தன. இதில் இத்தாலி நாட்டின் ஜானிக் சின்னர், செர்பியாவின் லஜோவிக்குடன் மோதினார். இதில் லஜோவிக் 64, 76 (74) என்ற செட் கணக்கில் கனடா ஓபன் டென்னிஸ் சாம்பியனை வெற்றார்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.